NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 11 March 2015

# இளம் வயதில் கவிதைகளைப் பதிப்பித்த ஹரினி



‘எஸ்ஜி50’, வாசகர் வட்டத்தின் 25வது ஆண்டு விழா ஆகிய நிகழ்வுகளை ஒட்டி சிங்கப்பூர் பெண் கவிஞர்களின் கவிதைகளை ‘நதிமிசை நகரும் கூழாங்கற்கள்’ எனும் தலைப்பில் தொகுத்து, கடந்த சனிக்கிழமை மாலை உட்லண்ட்ஸ் நூலகத்தில் நடந்த வாசகர் வட்ட நிகழ்ச்சியில் திரு ஜோ டி குருஸ், திரு கண்ணபிரான் ஆகியோர் வெளியிட்டனர். இந்நூலின் தொகுப்பாசிரியர் திரு எம். கே. குமார்.

தமிழ், கலை மீது கொண்ட ஆர்வத்தைக் கல்வியில் மட்டுமின்றி கவிதை வடிப்பது, கதை எழுதுவது போன்ற நடவடிக்கைகள் வழியாகவும் வெளிப்படுத்தி வருகிறார் ‘யேல்–என்யுஎஸ்’ பல்கலைக்கழகத்தில் ‘லிபரல் ஆர்ட்ஸ்’ எனும் கலைத்துறையில் முதலாமாண்டு பயிலும் ஹரினி. வி, 19.

தொடக்கப்பள்ளியில் பயிலும் காலத்திலிருந்தே கவிதை நூல்கள் பலவற்றைப் படிக்கும் ஆர்வம் கொண்ட ஹரினி, தம் மனதில் இருக்கும் எண்ணங்களையும் உணர்வுகளையும் அந்தக் கவிதைகள் பிரதிபலிப்பதாக உணர்ந்ததோடு தாமும் கவிதைகளும் கதைகளும் எழுதத் தொடங்கினார்.

உயர்நிலை ஒன்று படிக்கும்போது தாம் எழுதிய கவிதைக்குப் பரிசு கிடைத்தது, கவிதை எழுதுவதற்கு தம்மை ஊக்குவித்ததாகக் குறிப்பிட்ட ஹரினி, குடும்பத்தார் தாம் கவிதை எழுதுவதற்கு உற்சாகம் அளிப்பதாகக் குறிப்பிட்டார்.

தமது கவிதைத் திறனை மெருகேற்ற விரும்பும் ஹரினி, “கவிதைகளை அந்நியமாகக் கருதி ஒதுக்காமல் ஆறுதலும் மகிழ்ச்சியும் அளிக்கும் நண்பராக எண்ணி இளையர்கள் அவற்றை வாசிக்கலாம்; அதன் வழி தமிழையும் வளர்க்கலாம்,” என்றார். **படங்கள்: ஹரினி. வி**



## மௌனம் காப்பேன்

சுரங்களின் நடுவே
ஒலிக்கும்
அர்த்தங்களுக்கு ஈடு ஏதுமில்லை

வார்த்தைகள் கைகட்டி நிற்கின்றன
இசைவாசலில்
சிஷ்யனாய் ஏற்றுக்கொள்ள
கோரிக்கை விடுக்கின்றன

ஏழு கண்டங்கள் தாண்டி
எம்மொழியில் வார்த்தைகள்
தேடினாலும்
உன் பாடல்கள் கேட்டு
என் வார்த்தைகள் பதவி விலகல்
கடிதம் நீட்டுகின்றன
சரண் அடைகின்றன

இனி நானும் மௌனம் காப்பேன்
என் மௌனம்
உன் பாடல்களுக்குப்
பதில் சொல்லும்.

ஹரினி. வி

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.